THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 4th May 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at ten of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—OBITUARY REFERENCE TO SRI K. C. SAPTHARISHI REDDIAR AND SRI N. R. M. MUTHU THEVAR.

MR. SPEAKER: I regret to inform the House the death of Sri K. C. Saptharishi Reddiar on 24th April and Sri N. R. M. Muthu Thevar on 1st May 1962, both former Members of this House representing the South Central Landholders' Constituency and Nilakkottai Constituency respectively. As a mark of respect to the departed souls, I request hon. Member to stand in silence for two minutes.

The hon. Members stood in silence for two minutes.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Polytechnic (Sathanur)

*20 *Q.*—SRI A. ARUMUGAM: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ல் தானிப்பாடித் தொகுதியிலுள்ள சாத்தனூர் அணைப் பகுதியில் ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir.

SRI A. ARUMUGAM: Sir, will it be possible for the Government to open at least an industrial school at Sathanur Dam?

THE HON. SRI R. VENKATARAMAN: In the North Arcot district there are two polytechnics, the Government Polytechnic at Vellore and the Rajagopal Polytechnic at Gudiyatham.

As far as industrial schools are concerned, the information is not with me and I will collect it, if a separate question is put.

School fees (concession)

*21 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from a Member of the Assembly in regard to raising the income limit to Rs. 3,000 per year for the purpose of granting school fee concession to students; and

(*b*) if so, the action taken on the same?

[4th May 1962

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) The Government have considered the question and decided that the existing income limit need not be raised for the present.

SRI M. KALYANASUNDARAM: ஸார், இப்பொழுது இருக்கிறபடி 1,200 ரூபாய்க்கு அதிகமாக வருமானம் வரக்கூடிய பெற்றோர்களுடைய குழந்தைகளுக்கு கல்விச் சலுகை கிடையாது என்று இருக்கிறது. சமீபத்தில் வெளியிட்ட இரண்டாவது சம்பளக் கமிஷன் சிபாரிசின்படி வருமானம் அதிகரிக்காவிட்டாலும் பஞ்சப்படி அடிப்படை சம்பளத்துடன் சேர்க்கப்பட்டிருப்பதால் அதிகப்படியான வருமானம் என்று கருதி இந்தச் சலுகையைப் பெற முடியாமல் இருக்கிறது. ஆகையால் இதைப் பற்றி மறுபடியும் பரிசீலனை செய்து அப்படிச் சலுகைக் கொடுக்கக் கூடிய லிமிட்டை உயர்த்துவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முன்னமே இதைப் பற்றி பரிசீலனை செய்யப்பட்டு ஒரு முடிவுக்கு வரப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்லுகிறதை இனிமேல் அதைப் பற்றி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அப்படி யோசனைக்கு எடுத்துக்கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI K. MOOKIAH THEVAR: ஸார், சாதாரணமாகப் பார்த்தால் மில்களில் கூலி வேலை பார்க்கிறவர்களுக்குக்கூட சில சமயங்களில் 1,200 ரூபாய்க்கு மேல் வருமானம் வருவதால் அவர்களுடைய குழந்தைகளுக்குக்கூட இந்தச் சம்பளச் சலுகை கிடைக்காமல் இருக்கிறது. ஏனென்றால் அந்தத் தொகையே நீண்ட காலமாக வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்தத் தொகையை இன்னும் அதிகப்படியாக உயர்த்துவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா? அப்படிப்பட்ட உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மில் தொழிலாளர்களுக்கும் சாதாரணமாக வருட வருமானம் 1,200 ரூபாய்க்கு அதிகமாக வருகிறது என்பதைப் பார்த்தால் அதைக்கண்டு பெருமைப்படவேண்டியதாகத்தான் இருக்கிறது. மில் தொழிலாளர்களுக்குக் கூட மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு அதிகமாக வருமானம் வருகிறது என்பதைப் பார்க்க சந்தோஷம் தான். அதைக் கண்டு சந்தோஷப்பட வேண்டிய விஷயம் தான். அதனால் தான் 100 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். அதைவிடக் குறைவாக வருமானம் வரக்கூடிய ஏழைகளும் இருக்கின்றார்கள். அவர்களுக்குச் சலுகை காட்டவேண்டும் என்பதற்காகத்தான் இந்த அளவு வைக்கப்பட்டிருக்கிறது. அதைவிட உயர்த்த வேண்டுமானால் அதைப்பற்றி பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்க வேண்டியதாக இருக்கிறது.

4th May 1962]

SRI M. KALYANASUNDARAM: இந்தச் சபை அங்கத்தினர் கொண்டுவந்த காரணத்திற்காக இதை சீக்கிரத்தில் பரிசீலனை செய்யாமல் இருக்காமல் பொதுவாக நியாயமான அடிப்படையில் இதைப்பற்றி பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு கூடிய சீக்கிரம் வருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சபை அங்கத்தினர் கொண்டு வந்த காரணத்தினால் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்பது இல்லை. அதற்காக அதை புறக்கணிக்க வேண்டும் என்பது அல்ல. மற்றும் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர் கொண்டு வருவதாக இருந்தாலும் அதற்கு என்று விசேஷ கவனம் செலுத்தாமல் இருக்க மாட்டார்கள். அதற்காகவும் அதை புறக்கணிக்க மாட்டார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI J. MATHA GOWDER: ஸார், சாதாரணமாக கூலி வேலை செய்யக்கூடியவர்கள் மாதம் 90 ரூபாய் சம்பளம் வாங்கி அத்துடன் வருஷத்திற்கு 200 அல்லது 300 ரூபாய் போனஸ் வாங்கினால் அந்த போனஸையும் சம்பளத்துடன் சேர்த்து அதையும் வருமானமாகக் கருதி அந்த அளவில் வருடம் ஒன்றுக்கு 1,200 ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது என்று கணக்கிட்டு சம்பளச் சலுகை கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே போனஸை வருமானமாகக் கருதாமல் சம்பளச் சலுகைக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய போனசும் வருமானம் என்றுதான் கருதப்படுகிறது. அதன் காரணத்தால்தான் சம்பளச்சலுகை கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதை வருமானம் என்று கருதாமல் இருக்க முடியாது. அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தான் வருமானம் கணக்கிடப்படுகிறது.

Clay washing factory (The Nilgiris)

*22 Q.—SRI T. KARCHA GOWDER: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லா கூடலூர் தாலூக்காவில் களிமண் சுத்தி செய்து பீங்கான் செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்க உத்தேசம் உண்டா?

(இ) ஆம் என்றால், எப்போது?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) A scheme for the establishment of only a clay washing plant in the Nilgiris is included in the Third Five-Year Plan.

(இ) The starting of the unit depends on the availability of adequate china clay for the purpose. A survey is being conducted regarding the availability of clay. The question of sanctioning the scheme will be taken up after receipt of the report on the above survey.